**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**FAST TRACK COURT AT MAGISTERIAL LEVEL, PATTUKKOTTAI**

| | |
|---|---|
| **STC. No.** | **101/2024** |
| **பெயர்:** | **அண்ணாதுரை -DW1** |
| **கனவர் பெயர் :** | **மாரிமுத்து** |
| **வயது:** | **54/2025** |
| **ஊர்:** | **ராஜாமடம்** |
| **தாலுக்கா** | **பட்டுக்கோட்டை** |
| **வேலை** | **lab Assistant** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 30**th day of September 2025**

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் 03.12 PM**
**புகார்தாரர் ஆஜர்**
**எதிரி தரப்பு முதல் விசாரணை (allowed vide CrMP No. 1883/2025)**
**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலரான திரு. S. குமார் (பலகை எழுத்தர் நிலை -3) என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

1. புகார்தாரரை எனக்கு நேரடியாக தெரியாது. எனக்கு புகார்தாரரை பட்டுக்கோட்டையில் உள்ள அரசு மேல்நிலைபள்ளி ஆய்வக உதவியாளராக பணிபுரிந்து வந்த திரு.சந்திரசேகர் என்பவர் மூலம் எனக்கு புகார்தாரர் பழக்கம். நான் ரூ.1,10,000/- ஐ நான் ரூ.20,000/- ஆக முதல் தடவையும், ரூ.20,000/- ஆக இரண்டாவது தடவையும், ரூ.20,000/- ஆக மூன்றாவது தடவையும், ரூ.20,000/- ஆக நான்காவது தடவையும், ஐந்தாவது தடவை எவ்வளவு ரூபாய் வாங்கினேன் என்று ஞாபகம் இல்லை. ஆனால், மொத்தம் ரூ.1,10,000/- வாங்கினேன். புகார்தாரர் என்னிடம் நான் பெற்றற கடனிற்கு நான் கொடுத்த காசோலையை கேட்டதால் சுமார் 25 காசோலை அடங்கிய புத்தகத்தை மொத்தமாக கொடுத்தேன். அந்த காசோலை புத்தகத்தில் சுமார் 25 காசோலையையும் கலெக்சனுக்காக வெவ்வேறு நாட்களில் செலுத்தி ரூ.1,10,000/- க்கு மேல்

புகார்தாரர் எடுத்து கொண்டார். நான் புகார்தாரருக்கு கொடுக்க வேண்டிய அனைத்து ரூபாயையும் கொடுத்து விட்டேன். நான் காசோலையை 2023 ம் ஆண்டு புகார்தாரரிடம் திருப்பி தருமாறு கேட்டேன். நான் பணம் கொடுத்த பின் காசோலையை கேட்டதற்கு புகார்தாரர் அவருடைய நண்பரிடம் இருக்கிறது என்றும், அதை புகார்தாரர் வாங்கி தருவதாக கூறினார். நான் இவ்வழக்கின் காசோலைக்குண்டான தொகை ரூ.5,00,000/- எந்நாளும் வாங்கவில்லை. நான் கடன் தொகையை செலுத்திவிட்டதால் புகார்தாரருக்கு பதில் அறிவிப்பு அனுப்பவில்லை. நான் பெற்ற கடனான ரூ.1,10,000/- ஐ கொடுத்துவிட்டதால், என்னை வழக்கில் இருந்து விடுவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நான் புகார்தாரரிடம் கொடுத்த காசோலை புத்தகத்தை பூர்த்தியும் செய்யவில்லை, அதில் கையொப்பமும் இடவில்லை. நான் அரசு வேலையில் இருப்பதால் புகார்தாரர் என்னை மிரட்டி பணம் பறிக்கும் நோக்கில் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

**(எதிரிதரப்பு முதல் விசாரணை முடிக்கப்பட்டது.)**

**<u>முடிக்கப்பட்ட நேரம்</u> 03.31 PM**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/-திரு. எம். விஷால் ஆனந்த்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், (நடுவர் நிலை)
பட்டுக்கோட்டை.